**ஜனவரி – 08**

# TNPSC துளிகள்

- இந்தியாவின் முதலாவது காகிதமற்ற நீதிமன்றமாக கேரள உயர்நீதிமன்றம் மாற உள்ளது.
    - உச்சநீதிமன்ற நீதிபதி D.Y. சந்திரசூட், 2022 ஆம் ஆண்டு ஜனவரி 01 அன்று ஸ்மார்ட் (திறன்மிகு) நீதிமன்ற அவைகளைத் தொடங்கி வைத்தார்.
- சர்வதேச சூரியசக்திக் கூட்டிணைவில் இணைந்த 102வது நாடாக ஆன்டிகுவா மற்றும் பார்படா ஆகியவை மாறியுள்ளது.
    - இந்திய உயர் ஆணையர் டாக்டர் J. ஸ்ரீனிவாஸ் என்பவரின் முன்னிலையில் ஆன்டிகுவா மற்றும் பார்படா ஆகியவை சர்வதேச சூரியசக்திக் கூட்டிணைவில் சேர்க்கப் பட்டுள்ளன.

# தமிழ்நாடு செய்திகள்

## சென்னை விமான நிலையம்

- பெரிய விமான நிலையங்களில் 'உரிய நேரத்தில் செயல்படும்' (On Time Performance) விமான நிலையங்கள் எனும் ஒரு உலகளாவியப் பட்டியலில் (2021) சென்னை விமான நிலையம் 8வது இடத்தில் உள்ளது.
- 'சிரியம்' எனப்படும் முன்னணி வான்வழிப் பகுப்பாய்வு என்ற நிறுவனத்தினால் இந்தப் பட்டியல் வெளியிடப்பட்டது.
- முதல் 10 இடங்களில் இடம் பெற்றுள்ள ஒரே இந்திய விமான நிலையம் இதுவாகும்.
- முதல் 3 இடங்களில் உள்ள விமான நிலையங்கள் அமெரிக்காவின் மியாமி விமான நிலையம், ஜப்பானின் ஃபுகுகா மற்றும் ஹனேதா விமான நிலையம் ஆகியவை ஆகும்.




| | On-Time Ranking | On-Time Departure | Total Flights | Tracked Flights | Routes Served |
|---|---|---|---|---|---|
| (ITM) Itami Airport | 1 | 96.51% | 55,752 | 98.58% | 34 |
| (FUK) Fukuoka Airport | 2 | 95.74% | 58,975 | 92.45% | 35 |
| (HND) Haneda Airport | 3 | 95.55% | 154,158 | 93.17% | 84 |
| (CTS) New Chitose Airport | 4 | 95.05% | 51,667 | 95.39% | 31 |
| (SVO) Sheremetyevo International Airport | 5 | 94.79% | 140,476 | 83.80% | 207 |
| (LIM) Jorge Chavez International Airport | 6 | 92.16% | 53,409 | 91.51% | 59 |
| (PTY) Tocumen International Airport | 7 | 91.93% | 48,408 | 97.31% | 75 |
| (MAA) Chennai Airport | 8 | 89.32% | 49,923 | 81.90% | 70 |
| (SHA) Shanghai Hongqiao International Airport | 9 | 89.19% | 147,570 | 83.52% | 65 |


## சட்டசபை நடவடிக்கைகள் – நேரடி ஒளிபரப்பு

- கேள்வி நேரத்துடன் தொடங்கிய தமிழக சட்டசபை நடவடிக்கைகள் வரலாற்றில் முதல் முறையாக நேரலையில் ஒளிபரப்பப் பட்டன.

- தகவல் மற்றும் பொது உறவுகள் இயக்குநரகமானது இதனை நேரலையில் ஒளிபரப்பச் செய்தது.
- இது தவிர, டிடி பொதிகை என்கிற தொலைக்காட்சி ஊடகமும் இதனை நேரலையாக ஒளிபரப்பியது.

# தேசியச் செய்திகள்

## இந்தியாவில் சீட்டா (வேங்கை) அறிமுகம் – செயல்திட்டம்




- மத்திய அரசானது, இந்தியாவில் சீட்டாக்களை (வேங்கை அல்லது சிவிங்கிப் புலி) அறிமுகம் செய்வதற்கான ஒரு செயல்திட்டத்தினை வெளியிட்டது.
- இந்தச் செயல்திட்டமானது தேசிய புலிகள் வளங்காப்பு ஆணையத்தின் 19வது சந்திப்பில் சுற்றுச்சூழல் அமைச்சகத்தினால் வெளியிடப்பட்டது.
- இந்தச் செயல்திட்டத்தின் கீழ், அடுத்த 5 ஆண்டுகளில் 50 சீட்டாக்கள் இந்தியாவில் அறிமுகப் படுத்தப்படும்.
- இதற்காக சுமார் 12 முதல் 14 சீட்டாக்கள் தென் ஆப்பிரிக்கா அல்லது நமீபியா போன்ற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும்.
- ஒவ்வொரு சிவிங்கிப்புலி உடலிலும் செயற்கைக்கோள் புவி இடங்காட்டி நுட்பம் சார்ந்த மிக அதிக அதிர்வெண் ரேடியோ அலைகளை வெளியிடும் ஒரு கழுத்துப் பட்டையானது பொருத்தப்படும்.
- இவை மத்தியப் பிரதேசத்திலுள்ள குனோ பால்புர் தேசியப் பூங்காவிற்குக் கொண்டு செல்லப் படும்.

## பெண்களுக்கு எதிரான குற்றப் பதிவுகள்

- கடந்த ஆண்டில் தேசியப் பெண்கள் ஆணையத்தில் பெண்களுக்கு எதிரான குற்ற

வழக்குகள் கிட்டத்தட்ட 31,000 என்ற அளவில் பதிவாகி உள்ளன.

- 2014 ஆம் ஆண்டு முதல் பதிவான வழக்குகளில் இதுவே அதிகமாகும்.
- அவற்றுள் பாதியளவு வழக்குகள் உத்தரப் பிரதேசத்தில் மட்டும் பதிவாகியுள்ளன.
- 2020 ஆம் ஆண்டில் பதிவான வழக்குகளுடன் ஒப்பிடுகையில் 2021 ஆம் ஆண்டில் 30% என்ற அளவில் அதிக வழக்குகள் பதிவாகியுள்ளன.
- உத்தரப் பிரதேசத்தில் கண்ணியத்துடன் வாழ்வதற்கான உரிமை, குடும்ப வன்முறை போன்றவை தொடர்பான வழக்குகளே அதிக எண்ணிக்கையில் பதிவாகியுள்ளதாக தரவுகள் கூறுகின்றன.

**COMPLAINTS BY AGGRIEVED WOMEN**

| Categories | 2020-21 | 2019-20 |
|---|---|---|
| Cyber crime against women | 797 | 458 |
| Harassment of married women/ dowry harassment | 4,209 | 3,963 |
| Domestic violence | 6,049 | 3,369 |
| Right to live with dignity | 8,688 | 5,061 |
| Police apathy | 1,460 | 1,968 |



## சிலிக்கா நீர்ப்பறவை நிலை அறிக்கை – 2022





- ஒடிசா மாநில வனவிலங்கு அமைப்பானது சமீபத்தில் சிலிக்கா ஏரியில் பறவைகள் கணக்கெடுப்பு ஒன்றினை மேற்கொண்டது.
- சிலிக்கா மேம்பாட்டு ஆணையம் மற்றும் மும்பை இயற்கை வரலாற்றுச் சமூக அமைப்பு ஆகியவையும் இந்த அமைப்புடன் இணைந்து செயல்பட்டன.
- சிலிக்கா ஏரியானது மிகப்பெரிய உவர்நீர் ஏரியாகும்.
- இந்த ஏரியில் பெருமளவில் காணப்படும் பறவை இனங்களான ஊசிவால் வாத்து, நாமத்தலை வாத்து மற்றும் கருவால் வாத்து ஆகியவை ஒரு லட்சம் எண்ணிக்கையில் இங்கு உள்ளன.
- 2022 ஆம் ஆண்டின் கணக்கெடுப்பில், பெரும் பூநாரைகளின் எண்ணிக்கையானது 10 வருடங்களில் இல்லாத அளவில் ஒரு உச்சத்தைத் தொட்டுள்ளது.


- நலபனா பகுதியில் சேற்றுநிலங்களை மறுசீரமைப்புச் செய்ததே இதற்கான முக்கியக் காரணமாகும்.

## தானியங்கு உற்பத்திக் கட்டுப்பாடு

- ஆற்றல் மற்றும் புதிய & புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறை அமைச்சர் இராஜ்குமார் சிங், தேசத்திற்கு வேண்டி தானியங்கு உற்பத்திக் கட்டுப்பாடு என்ற அமைப்பினை நாட்டிற்காக அர்ப்பணித்து அதனைத் தொடங்கி வைத்தார்.
- அந்த அமைப்பானது, இந்திய ஆற்றல் கட்டமைப்பின் அதிர்வெண்ணினையும் அதன் நம்பகத் தன்மையையும் அதனைச் சீராக வைத்திருப்பதற்காக ஆற்றல் உற்பத்தி ஆலைகளுக்கு ஒவ்வொரு 4 விநாடிகளுக்கும் ஒரு முறை சமிஞ்கைகளை அனுப்பச் செய்கிறது.
- 2030 ஆம் ஆண்டிற்குள் 500 GW திறனில் புதைபடிமம் சாரா எரிபொருள் உற்பத்தி என்ற அரசின் ஒரு இலக்கை அடையச் செய்வதில் இது உதவும்.

## இந்தியாவின் புதைபடிமம் சாரா எரிபொருள் அடைந்த உச்சம்








- 2030 ஆம் ஆண்டிற்கு மிக முன்னதாகவே தனது புதைபடிமம் சாராத ஒரு எரிபொருள் இலக்கினை இந்தியா அடைந்துள்ளதாக புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறை அமைச்சகம் சமீபத்தில் அறிவித்தது.
- 21வது பங்குதாரர்கள் மாநாட்டில், இந்தியாவின் ஒட்டு மொத்த ஆற்றல் திறனில் 40% திறனைப் புதைபடிமம் சாரா மூலங்களைச் சார்ந்து உருவாக்கும் என இந்தியா உறுதி பூண்டது.
- 2030 ஆம் ஆண்டிற்குள் இந்த இலக்கை அடைவதற்கு இந்தியா இலக்கு நிர்ணயித்தது.
- ஆனால் 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திலேயே இந்த இலக்கை இந்தியா எட்டியது.
- இந்தியாவில் நிறுவப்பட்டுள்ள மொத்த மின்சார உற்பத்தித் திறன் 392.01 GW ஆகும்.
- இதில், புதைபடிமம் சாரா எரிபொருள் சார்ந்த ஆற்றல்திறன் 157.32GW ஆகும்.
- இது 392.01 GW திறனில் துல்லியமாக 40.1% ஆகும்.

## இந்தியாவின் எத்தனால் நுகர்வு

- சர்வதேச எரிசக்தி முகமையின் சமீபத்திய அறிக்கையின்படி, 2026 ஆம் ஆண்டில் உலகின் 3வது மிகப் பெரிய எத்தனால் சந்தையாக மாறும் ஒரு பாதையில் இந்தியா பயணித்து வருகிறது.
- 2070 ஆம் ஆண்டில் கார்பன் நடுநிலைமையை அடைவதற்காக தூய எரிசக்தி சூழலை நோக்கி நகர்ந்து வரும் பணிகளை முடுக்கி விட்டுள்ளதால் இந்தியா 2026 ஆம் ஆண்டில் அமெரிக்கா மற்றும் பிரேசில் ஆகிய நாடுகளுக்கு அடுத்த ஒரு நிலையைப் பெறும்.

- எத்தனால் கலவை வீதத்தினை விரிவுபடுத்தச் செய்வதில் இந்தியா ஒரு “பெரும் முன்னேற்றத்தினை” அடைந்துள்ளதாக சர்வதேச எரிசக்தி முகமை கூறுகிறது.
- 2017 ஆம் ஆண்டில் பின்பற்றிய எத்தனால் கலப்பு வீதம் 2% ஆகும்.
- 2021 ஆம் ஆண்டில் இது 8% ஆக உயர்ந்தது.
- இதன் மூலம், 2022 ஆம் ஆண்டில் 10% கலப்பு வீதத்தினை இந்தியா எட்டுவது சாத்தியம் ஆகும்.




## PM-POSHAN திட்டம்




- ஐக்கிய நாடுகளின் உலக உணவுத் திட்ட அமைப்பானது, PM-POSHAN என்ற திட்டத்தின் செயல்திறனை மேம்படுத்தச் செய்வதற்காக பெங்களூருவைச் சேர்ந்த தன்னார்வத் தொண்டு நிறுவனத்துடன் ஒரு ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளது.
- PM-POSHAN என்றால் பிரதான் மந்திரி போஷன் சக்தி நிர்மான் (Pradhan Mantri Poshan Shakti Nirman) என்பதாகும்.
- இத்திட்டமானது இதற்கு முன்பு, மதிய உணவுத் திட்டம் என அழைக்கப்பட்டது.
- இந்த ஒப்பந்தமானது அக்சய பாத்திரா என்ற ஒரு அறக்கட்டளையுடன் மேற்கொள்ளப் பட்டது.

## சர்வதேச யோகா அகாடமி

- மத்திய ஆயுஷ் அமைச்சர், சர்பானந்த சோனோவால், தெலுங்கானாவின் ஹைதரபாத்

நகரில் ஒரு சர்வதேச ஆரோக்கிய யோகா அகாடமியை நிறுவுவதற்கு அடிக்கல்லை நாட்டினார்.


- மேலும், அவர் ஆசாதி கா அம்ரித் மகோத்சவ் என்ற ஒரு நிகழ்வின் ஒரு அங்கமாக 75 கோடி மதிப்பிலான சூரிய நமஷ்கார் என்ற ஒரு முன்னெடுப்பினையும் தொடங்கி வைத்தார்.

# பொருளாதாரச் செய்திகள்

## இதுவரையில் இல்லாத அதிகபட்ச மாதாந்திர ஏற்றுமதி

**ON THE RISE**

| | Value in $ bn | | | Growth in % | |
|---|---|---|---|---|---|
| | Dec '19 | Dec '20 | Dec '21 | Dec '21 over Dec '19 | Dec '21 over Dec '20 |
| Exports | 27.11 | 27.22 | 37.29 | 37.55 | 37.00 |
| Imports | 39.59 | 42.93 | 59.27 | 49.70 | 38.06 |
| Deficit | 12.49 | 15.72 | 21.99 | 76.10 | 39.90 |




Source: Department of Commerce

- டிசம்பர் மாதத்தில் மட்டும் 37.29 பில்லியன் டாலர் மதிப்பிலான பொருட்களை இந்தியா ஏற்றுமதி செய்துள்ளது.
- இது ஒரு மாதத்தில் நிகழ்ந்த மிக அதிக மதிப்பிலான ஒரு ஏற்றுமதியாகும்.
- 2020 ஆம் ஆண்டின் டிசம்பர் மாத ஏற்றுமதி மதிப்பை விட தற்போது இந்தியாவின் ஏற்றுமதி மதிப்பானது 37% உயர்ந்துள்ளது.

# மாநிலச் செய்திகள்

## திரவமாக்கப்பட்ட பெட்ரோலிய எரிவாயு பயன்பாடுடைய மற்றும் புகையற்ற முதல் மாநிலம்

- இமாச்சலப் பிரதேசமானது திரவமாக்கப்பட்ட பெட்ரோலிய எரிவாயு பயன்பாடுடைய மற்றும் புகையற்ற முதல் மாநிலமாக உருவெடுத்துள்ளது.
- மத்திய அரசின் உஜ்வாலா திட்டம் மற்றும் கிரஹிணி சுவிதா யோஜனா திட்டம் போன்றவற்றினால் இந்த மைல்கல்லை அடைய முடிந்தது.
- உஜ்வாலா திட்டமானது புகை சூழ்ந்த சூழலை ஒழிப்பதற்காக அரசினால் அறிமுகப் படுத்தப்பட்டது.


- கிரஹிணி சுவிதா திட்டமானது கிராமப்புறப் பெண்களுக்கு உதவுவதற்காக அறிமுகப் படுத்தப்பட்டது.




# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## சிந்துதாய் சப்கல்

- சமூக சேவகி சிந்துதாய் சப்கல் தனது 73வது வயதில் காலமானார்.
- இவர் 'ஆதரவற்றோரின் தாய்' எனவும் அழைக்கப்பட்டார்.
- இவர் 'சிந்துதாய்' அல்லது 'மாய்' எனவும் அழைக்கப்பட்டார்.
- 2011 ஆம் ஆண்டில் சமூக சேவைப் பிரிவில் இவருக்கு பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டது.
- இவர் மகாராஷ்டிராவைச் சேர்ந்தவர் ஆவார்.
- இவரது வாழ்க்கை வரலாற்றைத் தழுவி உருவாக்கப்பட்ட "Mee Sindhutai Sapkal" என்ற ஒரு திரைப்படம் 2010 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது.




# முக்கிய தினங்கள்

## போரினால் ஆதரவற்றவர்கள் ஆகியோருக்கான உலக தினம் – ஜனவரி 06

- இத்தினமானது மோதல்களினால் தங்கள் பெற்றோரை இழந்த குழந்தைகளின் அவல

நிலை குறித்த ஒரு விழிப்புணர்வினை ஏற்படுத்துகிறது.

- இத்தினமானது SOS என்ஃபேன்ட்ஸ் என் டிரொசஸ் (SOS Enfants en Dresses) எனும் பிரான்சு நாட்டு அமைப்பினால் தொடங்கப்பட்டது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★